[2008 மே 14

(ஆ) ஜெய்ப்பூரில் தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 13-5-2008 அன்று இரவு இராஜஸ்தான் மாநில தலைநகர் ஜெய்ப்பூரில் நடைபெற்ற குண்டு வெடிப்பினால் பெருமளவில் உயிரிழப்பு ஏற்பட்ட துயரச் செய்தியை அறிந்து இப்பேரவை மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறது. இந்திய நாடு முழுவதும் அதிர்ச்சி ஏற்படுத்திய இந்தக் கொடிய நிகழ்ச்சியில் இன்னுயிர்களை இழந்த நூற்றுக்கணக்கான மக்களின் குடும்பத்தினருக்கும், இதில் படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவோருக்கும் மற்றும் இக்கோரச் சம்பவத்தால் துயரத்திற்கு ஆளாகியுள்ள ஜெய்ப்பூர் மக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேறின.)

3. விதி 110-ன்கீழ் அறிக்கை

உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, விபத்துகளில் உயிர் இழந்தவர்கள், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் / பலியானவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

+மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி எண் 110-ன்கீழ் பேரவையிலே இந்த அறிக்கையினைப் படிக்க தங்களிடம் அனுமதி பெற்றுள்ளேன்.